17.11.2016

தினமணி

**மஞ்சள் பாலிஷிங் இயந்திரம் வாங்க தமிழக விவசாயிகளுக்கு மானியம்:**

**மாநிலங்களவையில் அமைச்சர் நிர்மலா சீதாராமன் தகவல்**

மஞ்சள் பாலிஷிங் இயந்திரம் வாங்குவதற்கு தமிழகத்தைச் சேர்ந்த மஞ்சள் சாகுபடி விவசாயிகளுக்கு மானியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மாநிலங்களவையில் மத்திய வர்த்தகத் துறை இணை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மாநிலங்களவையில் உறுப்பினர்களின் கேள்விக்கு அமைச்சர் நிர்மலா சீதாராமன் புதன்கிழமை எழுத்துப்பூர்வமாக அளித்துள்ள பதில் வருமாறு: ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டு இயக்கத்தின் கீழ், மஞ்சள் பாலிஷிங் இயந்திரங்களை அமைப்பதற்காக மஞ்சள் சாகுபடி விவசாயிகளுக்கு இந்திய நறுமணப் பொருள்கள் வாரியம் மூலம் உதவி அளிக்கப்படுகிறது.

இந்த திட்டத்தின்படி, தமிழகம் உள்பட மஞ்சள் சாகுபடி அதிகளவில் நடைபெறும் மாநிலங்களில் எஸ்சி, எஸ்டி விவசாயிகள், சிறு, விளிம்புநிலை, பெண் விவசாயிகள் ஆகியோருக்கு மஞ்சள் பாலிஷிங் இயந்திரத்தின் விலையில் 35 சதவீதம் (அதிகபட்சம் 87,500) மானியமாக அளிக்கப்படுகிறது. பிற விவசாயிகளுக்கு இயந்திரத்தின் விலையில் மானியமாக ரூ.62,500 வழங்கப்படுகிறது.

2016-17 நிதியாண்டில் மஞ்சள் பாலிஷிங் இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்காக ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் (எம்ஐடிஎச்) மொத்தம் ரூ.10.80 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில், தமிழகத்திற்கு ரூ.2.62 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, இந்திய நறுமணப் பொருள்கள் வாரியம் மூலம் ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி, ஏற்றுமதி மேம்பாடு மற்றும் நறுமணப்பொருள்கள் ஊக்குவிப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மஞ்சள் சாகுபடி விவசாயிகளுக்கு மஞ்சள் கொதிகலன்களை நிறுவுவதற்கு கொதிகலன் விலையில் 50 சதவீதம் அளவுக்கு அதாவது அதிகபட்சம் ரூ.1.50 லட்சம் வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது என்று நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

## வட கிழக்கு பருவமழை தாமதம்: கவலையில் விவசாயிகள்



ராணிப்பேட்டை பாலாற்று வறண்டு பாலைவனம் போல் காட்சியளிக்கிறது வட கிழக்கு பருவமழை பெய்வது தாமதமாகி வருவதால், விவசாயிகளும், பொதுமக்களும் கவலை அடைந்துள்ளனர். தமிழகத்தில் வழக்கமாக அக்டோபர் மாத இறுதியில் வட கிழக்குப் பருவமழை பெய்யத் தொடங்கும். அதேபோல் கடந்த ஆண்டு எதிர்பாராத வகையில் கனமழை பெய்ததையடுத்து, நீர்நிலைகள் நிரம்பி, வறண்டு கிடந்த ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இந்த ஆண்டு வட கிழக்கு பருவமழை தொடங்க தாமதமானாலும், மழையின் அளவில் குறைய வாய்ப்பில்லை என்றும், ஒரே நாளில் 45 செ.மீ. அளவுக்குக்கூட மழை பெய்ய வாய்ப்புள்ளது எனவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

அதேபோல் வடகிழக்கு பருவமழை சற்று தாமதமாக நவம்பர் முதல் தேதியன்று தொடங்கியது. தொடர்ந்து தமிழகத்தின் ஒரு சில இடங்களில் ஆங்காங்கே லேசான மழை பெய்து வருகிறது. ஆனால் வேலூர் மாவட்டத்தில் ஒரு சில நாள்கள் மட்டுமே லேசான மழை பெய்தது. அதனைத் தொடர்ந்து பகலில் வெயிலும், இரவில் கடும் பனிப்பொழிவுமாக இருந்து வருகிறது.

இதனால் விளை பயிர்களுக்கு போதுமான தண்ணீர் இன்றி பயிர்கள் கருகும் நிலை உள்ளதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். மேலும் இதே நிலை நீடித்தால் குடிநீருக்கே திண்டாடும் சூழல் உருவாகும் என பொதுமக்களும் கவலை அடைந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த ஆண்டு பெய்த கன மழை காரணமாக கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக தண்ணீரின்றி பாலைவனமாக காட்சியளித்து வந்த வேலூர் மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கிவரும் பாலாற்றில்,

கடந்த ஆண்டு நவம்பர் 17-ஆம் தேதி மழை வெள்ளம் வரத் தொடங்கி படிப்படியாக வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

இதனால் மாவட்டத்தில் உள்ள 745 சிறுபாசன ஏரிகளில் 256 ஏரிகளும், பொதுப் பணித் துறையின் கீழ் உள்ள 519 ஏரிகளில் 256 ஏரிகளும் முழுவதுமாக நிரம்பின. மேலும் 117 ஏரிகள் முழுக் கொள்ளளவில் 75 சதவீதமும், 98 ஏரிகள் 50 சதவீதமும், 41 ஏரிகள் 25 சதவீதமும் நிரம்பியது. இதனால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்தனர். தொடர்ந்து மாவட்டம் முழுவதும் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து குடிநீர் பிரச்னை குறைந்தது மட்டுமின்றி, முன் எப்போதும் இல்லாத அளவுக்கு நெல் பயிர் சாகுபடி செய்யப்பட்டு அதிக அளவிலான நெல் மூட்டைகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நிரம்பி வழிந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர். ஆனால் இந்த ஆண்டு மழை பொய்த்துப் போனால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக பாதிக்கப்படும். இதனால் பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் பாலாற்றின் நீர் மட்டம் குறைந்து, குடிநீருக்கே திண்டாடும் நிலைக்கு தள்ளப்படும் சூழல் உள்ளதாகவும் பொதுமக்களும், விவசாயிகளும் கவலை அடைந்துள்ளனர்.



கடந்த ஆண்டு இதே நாளில் ராணிப்பேட்டை பாலாற்றில் கரைபுரண்டு ஓடிய மழை வெள்ளத்தை காண திரண்ட சிறுவர்கள், பொதுமக்கள். **வட கிழக்கு பருவமழை தாமதமானதால் விளை பயிர்களுக்கு போதுமான தண்ணீர் இன்றி பயிர்கள் கருகும் நிலை உள்ளதாக விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்**